DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**STC.No.1043/2018**

Deposition of witness for Prosecution அ.சா.6

| | | |
|---|---|---|
| பெயர் | : | அண்ணாதுரை |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | முனியாண்டி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 06.02.2026

எதிரி ஆஜர் இல்லை. அவரைப் பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கோயம்புத்தூர் சரக குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறையில் காவல் துணைக்கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.11.2015 ம் தேதி தேவகோட்டை தாலுகா வட்டக் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் காலை 4 மணிக்கு தேவகோட்டை தாலுகா காவல் நிலையை உதவி ஆய்வாளர் திரு. கண்ணப்பன் அவர்கள் தேவகோட்டை தாலுகா காவல் நிலைய குற்ற எண்.480/2015, இதச பிரிவுள் 279,337 வழக்கு கோப்பினை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்கை பெற்று வந்த சின்னத்தம்பி இறந்துவிட்ட தகவல் தெரிந்து வழக்கின் சட்டப்பிரிவை 279,304(எ) வழக்காக மாறுதல் செய்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (**மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் அன்றை தினம் 8.30 மணிக்கு இறந்த

சின்னத்தம்பி உடலை சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை நடத்தினேன். **(மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் இறந்த சின்னத்தம்பி உடலை சடலக்கூறாய்வு செய்வதற்கு தலைமைக்காவலர் தாசன் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து உடற்கூறாய்வு செய்து இறந்த உடலை உறவினர்களிடம் ஒப்படைத்தேன். பின்னர் பட்டியல் சாட்சிகள் சாமியய்யா, கருப்பையா, ரவி, காளியம்மாள், பகவதி, கலைச்செல்வி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு கோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு பணி மாறுதலில் சென்றுவிட்டேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

காயம்பட்டு இறந்த சின்னத்தம்பி நடந்து சென்றாரா இல்லை வாகனத்தில் சென்றாரா என்று குறிப்பிட்டு புகாரிலோ என்னுடைய விசாரணையிலோ எந்த இடத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சாமியய்யாவின் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார். எதிரி சாலை விதிகளை கடைபிடித்து வந்தார் என்றும் இறந்த சின்னத்தம்பி சாலை விதிகளை மதிக்காமல் சாலையை கடக்க முயற்சித்தபோதுதான் விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.